1989 மே 4 [திரு. ஓ. சி. தயாளன்[

வாயார இந்த அரசை வாழ்த்துகிறார்கள். அவர்களுடைய வாழ்த்தோடு என்னுடைய வாழ்த்தையும் இணைத்து என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால் ஒரு பாடல் வரியை நினைவு கூர்ந்து என் உரையை முடிக்கிறேன். ''ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை'' என்பது போல இந்த அரசினுடைய திட்டங்களை, இந்த அரசினுடைய சீரிய சிறப்பு களை யாராலும் மறைக்க முடியாது என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

7. விதி 110-இன் கீழ் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் அறிக்கை

முதலமைச்சர் பிறந்தநாளையொட்டி இலவச கண் சிகிச்சைத் திட்டங்களைத் துவங்குதல் குறித்து

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110இன் கீழ் இந்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்:

''கண் பார்வையற்றவர்களுக்கு இலவச கண் சிகிச்சை அளிக்கும் நோக்கத்தோடு தமிழக முதல்வர் அவர்கள் தனது முந்தைய பதவிக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு முகாம்களை நடத்தியதை நாம் நன்கு அறிவோம். அதை விரிவுபடுத்தும் எண்ணத்தோடு இந்த ஆண்டு கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் தேதி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இடத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்துவது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், இந்த ஆண்டில் சென்னை, செங்கை—அண்ணா, திருச்சி, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களையும் கண் புரை யற்ற மாவட்டங்களாக (கேட்டராக்ட் ப்ரீ டிஸ்டிரிக்ட்ஸ்) அறி வித்து, இந்த நோயை அந்த மாவட்டங்களில் இல்லாமல் செய்வதுஎன்றும் படிப்படியாக மற்ற மாவட்டங்களிலும் இதை விரிவு படுத்துவது என்றும் இந்த அரசு முடிவு செய்துள்ளது''

மேலும், கண் சிகிச்சைக்காக நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் தனியார் கண் மருத்துவமனைகளையும் பயன்படுத்திக் கொள்வது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது,